செ.வெ.எண்:9 நாள்:9.6.2015

**திருவாரூர் மாவட்டத்தில் பள்ளி கல்லூரி விடுதிகளில் சேர்வதற்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பள்ளி,கல்லூரி மாணவ,மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படகின்றன- மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

திருவாரூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பள்ளி மாணவர்களுக்கு 14 விடுதிகளும் மற்றும் மாணவியர்களுக்கென 7 விடுதிகளும் கல்லூரி மாணவர்களுக்கு 2 விடுதிகளும் மற்றும் மாணவியர்களுக்கானது 5 விடுதிகளும் மொத்தம் 28 விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி விடுதிகளில் 4 முதல் 12ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்/ மாணவியர்களும் கல்லூரி/ பாலிடிடக்னிக் / ஐடிஐ விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் பாலிடிடக்னிக்/ஐடிஐ படிப்புகளில் பயிலும் மாணவ/ மாணவியர் சேரத்தகுதியுடைவர்கள் ஆவர். பிவ/மிபிவ/சீம விடுதிகளில் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவ/ மாணவிகளும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் அனைத்து விடுதி மாணவ/மாணவியருக்கு உணவும,10ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 செட் பாலியெஸ்டர் காட்டன் சீருடைகளும், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகளும், தங்கும் வசதியும்இலவசமாக வழங்கப்படுகின்றன.

பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8கி.மீக்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

தகுதியுடைய மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் /காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.06.2015க்குள்ளும், கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட காப்பாளர்/காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.07.2015க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே மாணவ/மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளை பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**